**அநுராதபுரம் மாவட்டத்தின் 42 கமநல சேவைக் குழுகககு- 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

அநுராதபுரம் மாவட்டத்தின் 42 கமநல சேவைக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டிற்குரிய அநுராதபுரம் மாவட்டத்தின் 42 கமநல சேவைக் குழுக்களுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 42 கணக்காய்வு அறிக்கைகளில் 41 குழுக்களுக்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், ஒரு குழுவிற்கு மறுப்பு அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.1 நிதிக்கூற்றுக்கள்

#### 1.1.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 41 கமநல சேவை குழுக்களுக்கு கிடைக்கப் பெற்ற ரூபா 23,790 ஆன 04 நடைமுறையல்லாச் சொத்துக்கள், கூட்டுப் பசளை வடிக்கும் இயந்திரம் / கூட்டுப்பசளை கூறுகளாக்கும் இயந்திரம், 12 நாற்றுக்கள் நடும் இயந்திரங்கள் என்பவற்றுக்காக கிடைக்கப் பெற்ற 8,000 தட்டுகள் 2023 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற தொலைக்காட்சி இயந்திரம் என்ற விடயங்களின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திரங்களின் பெறுமதி மாவட்ட அலுவலகங்களில் இருந்து பெற்று கணக்கீடு செய்யப்படும் என. | கமநல சேவை குழுக்களுக்கு சொந்தமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 09 குழுக்களால் மீளாய்வாண்டிற்குரிய கூட்டு | சரி செய்யப்படும். | நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாகக் |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தமாக ரூபா 674,587 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 04 கமநல சேவைக் குழுக்களில் கூட்டு மொத்தமாக ரூபா 182,688 ஆன காலாவதியான மரக்கறி நாற்றுக்கள் மற்றும் கூட்டுப் பசளை இருப்பு என்பன நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் அப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | இருப்பு பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 07 கமநல சேவைக் குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 2,254,693 ஆன நடைமுறையல்லாச் சொத்துக்கள் குறைத்து நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நடைமுறையல்லாச் சொத்துகளை சரியாக நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வருதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரியதாக 03 குழுக்களில் கூட்டுப்பெறுமதி ரூபா 622,065 ஆன கிடைக்க வேண்டிய கமநல வங்கி இலாபப் பங்கு நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாகவும் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் பெற வேண்டிய சொத்தாகவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விவசாய வங்கிகளின் இலாபத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆண்டிற்குரிய சகல வருமான செலவினங்களும் நிதிச் செயலாற்றல் கூற்றுக்கு கொண்டு வரவேண்டியிருந்ததுடன் நடைமுறைச் சொத்துக்களும் சரியாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 07 குழுக்களில் மென்பொருளுக்காக செலுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 156,786 தொகை ஆண்டிற்குரிய செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மூலதன செலவினம் மற்றும் வருமான செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 03 கமநல சேவைக் குழுக்களுக்கு கமநல அபிவிருத்தி மாவட்ட | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தில் இருந்து இந்த |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகத்தில் இருந்து மீளளிப்புச் செய்ய வேண்டிய ரூபா 363,635 ஆன பசளைப் பயன்பாட்டு செலவினம் நிதிக் கூற்றுக்களில் செலவினமாக காண்பிக்கப்பட்டமையால் மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | செலவினங்கள் மீளளிப்புச் செய்யப்படுகின்றமையால் நடைமுறைச் சொத்தாக நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஏ) | 02 கமநல சேவைக் குழுக்களில் வருடாந்த பெறுமானத் தேய்வு ஒதுக்கம் கூட்டுமொத்தமாக ரூபா 1,943,286 பெறுமதி நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறை பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சரியான இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஐ) | ஆட்டியாகல கமநல வங்கியினால் கணக்கீட்டு மென்பொருளுக்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 194,205 செலவினம் மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்படாமல் அப்பெறுமதி திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மூலதன செலவினங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஒ) | நேகம்பஹ கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டின் திரண்ட நிதியம் ரூபா 19,388,271 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமைக் கூற்றில் சீராக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் மொத்த தேறிய சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | திரண்ட நிதியத்தின் மீதி நிதி நிலைமைக் கூற்றில் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | பதவி பராக்கிரமபுர கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டிற்கான வங்கி வட்டி வருமானம் ரூபா 1,927,440 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 2,523,941 ஆக ரூபா 596,501 அதிகரித்துக் கணக்கீடு | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி வட்டி வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஔ) | பேய்மடுவ கமநல சேவைக் குழுவில் முறையே ரூபா 2,017,341 மற்றும் ரூபா 4,091,962 ஆன யூரியா மற்றும் எம்.ஓ.பீ மானியப் பசளை இருப்பு மீதியின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டுவரப்படாமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இருப்புப் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டு வருதல் வேண்டும். |
| (க) | கள்ளஞ்சிய கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டின் போது செலுத்தி தீர்க்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 245,000 ஆன டெக்டர் தவணைப் பணம் மற்றும் நீர் மட்ட அளவுகாட்டி பொருத்தும் செலவினம் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பேரேட்டுக் கணக்குகள் சரியாக நாளது வரையாக்கப்பட்ட பின்னர் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | முறியாக்கடவல கமநல சேவைக் குழுவில் செலுத்த வேண்டிய டெக்டர் மற்றும் விவசாய உபகரணங்களின் தவணைப் பணம் ரூபா 400,000 தீர்த்து வைக்கப்படாமல் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | வாகனம் ரூபா 475,000 தொகையில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதும் இதுவரை பொறுப்பில் இருந்து விடுவித்து மிகுதித் தொகை குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் உரியவாறு இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | கெப்பிட்டிக்கொல்லாவ கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 3,017,966 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 4,648,945 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 1,630,979 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | 02 கமநல சேவைக் குழுக்களினால் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,948,765 ஆன மூலதன செலவினம் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறுதலாக ஏற்பட்டிருந்தது. | மூலதன மற்றும் வரமான செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கு) | கெப்பிட்டிக்கொல்லாவ கமநல சேவைக் குழுவில் பசளைகளுக்கு உரியதாக மொத்த இலாபம் சரியாக கணிப்பீடு செய்யப்படாமையினால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 153,676 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறுதலாக ஏற்பட்டதாகும். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விற்பனைகளுக்கு உரிய மொத்த இலாபம் சரியாக கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கூ) | கெப்பிட்டிக்கொல்லாவ கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டின் போது ரூபா 161,484 செலவினத்தில் பசளைக் களஞ்சியத்திற்கு நுழையும் வாயில் கதவு பழுது பார்க்கப்பட்டிருந்த போதிலும் அப் பெறுமதியைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்ககப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய பழுதுபார்த்தல் செலவினங்களை சரியாக நிதிக் கூற்றுக்களில் இனங்காணல் வேண்டும். |
| (கெ) | கம்பிரிகஸ்வெவ கமநல சேவைக் குழுவில் நடப்பாண்டிற்காக தயாரிக்கப்பட்ட வணிக பசளை வியாபார கணக்கின் பிரகாரம் கூடிய விலை பசளை இறுதி இருப்பு ரூபா 3,926,242 தொகை நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இறுதி இருப்பு மீதிகள் சரியாக நிதி நிலைமைக் கூற்றில் இனங்காணப்படல் வேண்டும். |
| (கே) | கணக்காண்டு முடிவடைவதற்கு முன்னர் தீர்த்து வைக்க வேண்டி இருந்த போதிலும் ரனோராவ கமநல சேவைக் குழுவில் நீண்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 641,090 பெறுமதியான 03 தொங்கல் கணக்கு மீதிகள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கமநல சேவை பிரதி ஆணையாளரின் ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கு மீதிகள் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

### 1.1.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 கமநல சேவைக் குழுக்களின் நிதி நிலைமைக் கூற்றில் 03 பசளை விடயங்களுக்குரிய ரூபா 441,509 மீதி இருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கமின்மைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 02 கமநல சேவைக் குழுக்கள் மற்றும் 02 கமநல வங்கி நிதிக் கூற்றுக்கள் வங்கியினால் செலுத்த வேண்டிய இலாபப் பங்கின் பெறுமதி குழுப் புத்தகங்களின் பிரகாரம் மற்றும் பெற வேண்டிய கமநல வங்கி இலாபத்திற்கு இடையே ரூபா 314,444 இணக்கம் இன்மை காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கமின்மைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | எப்பாவல கமநல சேவைக் குழுவில் கூடிய விலை உள்ள பசளை விற்பனை பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் விற்பனை வருமானம் மற்றும் வியாபாரக் கணக்கு விற்பனை வருமானத்திற்கு இடையே ரூபா 928,000 இணக்கமின்மை காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியான மீதிகளை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குதல் வேண்டும். |
| (ஈ) | பலாகல கமநல சேவைக் குழுவின் நிதிக் கூற்றுக்களில் ஆட்டியாகல கமநல சேவை நிலையம் மற்றும் கமநல வங்கியில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 1,488,800 காண்பிக்கப்பட்டடிருந்த போதிலும் ஆட்டியாகல கமநல சேவைக் குழுவின் நிதிக் கூற்றில் அந்த மீதி காண்பிக்கப்படாமையினால் ரூபா 1,488,800 இணக்கம் இன்மை காணப்பட்டது. | இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது முடிவடைந்த பின்னர் தேவையான மிகுதி சீராக்கங்களை மேற்கொள்ள முடியும். | இணக்கமின்மைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பதவி பராக்கிரமபுர கமநல சேவைக் குழுவின் நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற பொருண்மையான இருப்புக் கணக்கு மற்றும் வியாபார கணக்கிற்கு இடையே 04 | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கமின்மைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களில் ரூபா 645,084 வேறுபாடு காணப்பட்டது. | | |
| (ஊ) | எத்தாகட கமநல சேவைக் குழுவின் நிதிக் கூற்றுக்களில் மாணிய உரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட வியாபாரக் கணக்கின் பிரகாரம் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மாணிய உர இருப்பின் பெறுமதி மற்றும் 2023 ஆம் ஆண்டின் ஆரம்ப இருப்பின் பெறுமதிகளுக்கு இடையே ரூபா 2,690,939 இணக்கம் இன்மை காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இணக்கமின்மைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.1.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 28 கமநல சேவைக் குழுக்களுக்குரிய நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 17,819,896 நடைமுறையல்லாச் சொத்துக்களில் 05 விடயங்கள், ரூபா 143,877,199 ஆன 25 நடைமுறைச் சொத்து விடயங்கள், ரூபா 2,359,992 ஆன 02 நடைமுறையல்லாப் பொறுப்பு விடயங்கள் மற்றும் ரூபா 96,728,127 ஆன 22 நடைமுறைப் பொறுப்பு விடயங்கள் என்பவற்றின் நிலையான சொத்துப் பதிவேடு, உரித்தை உறுதிப்படுத்தும் கடிதம், இருப்புப் பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் காலப் பகுப்பாய்வு அறிக்கை காணப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | 2024 இன் கணக்கு அறிக்கைகளில் இந்த குறைபாடுகளைத் தயாரித்து சரியான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு தேவையான பதிவுகள், அறிக்கைகள், ஆவணங்கள் போன்றவற்றை உள்ளடக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.1.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி | சிராவஸ்திபுர கமநல சேவைக் குழுவின் பிரச்சனைகள் காணப்படுகின்ற வயல்களில் விவசாயிகளினால் காணி | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு | உரிமைக்கு செலுத்தும் வகையில் குழுவில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 1,295,922 தொகை காணி உரிமையாளர் பணம் ஆண்டின் பல ஆண்டு காலம் முதல் குழுவில் நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டடிருந்தது. | | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 53(1) ஆம் பிரிவு | 03 கமநல சேவைக் குழுக்களின் 2023 ஆம் ஆண்டில் பயிர்ச் செய்கை போகங்களுக்கு உரியதாகக் காணப்பட்ட விவசாய கைத்தொழில் நிகழ்ச்சித் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாய சோசலிசக் குடியசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப்பிரமாணம் 110 | 18 கமநல சேவைக் குழுக்களால் இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | நிதிப்பிரமாணம் 156(5) | 08 கமநல சேவைக் குழுக்களில் பேரேடு, நாளாந்த காசுப் பெறுவனவுப் பதிவேடு, நாளாந்த காசுக் கொடுப்பனவுப் பதிவேடு, இருப்புப் புத்தகம், காசேடு, அழிக்கும் கரைசலை பயன்படுத்தி மாற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்படி |
| iii. | நிதிப்பிரமாணம் 264 | 02 கமநல சேவைக் குழுக்களால் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட முறையே ரூபா 206,056 மற்றும் ரூபா 34,000 ஆன கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்காக உறுதிச் சீட்டில் குறிப்பிடப்பட்ட தொகை பெறப்பட்டமைக்கு பெறுநரின் கையொப்பமோ அல்லது | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதற்கான கொடுப்பனவு செய்யப்பட்டமைக்கான உறுதிச் சீட்டுடன் எந்த ஒரு எழுத்து மூல சான்றுகளும் காணப்படவில்லை. | | |
| iv. | நிதிப்பிரமாணம் 316 | அரசாங்கத்தின் சகல நிதியும் காப்பகத்தில், பாதுகாப்புப் பெட்டியில், பாதுகாப்பு அறையில் போன்ற பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டிய போதிலும் 09 கமநல சேவைக் குழுக்களுக்காக நிதி அவ்வாறான பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டிருக்க வில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| v. | நிதிப்பிரமாணம் 342(5) | 03 கமநல சேவைக் குழுக்கள் பயன்படுத்தி முடிவடைந்த அடியிதழ் பற்றுச்சீட்டுப் புத்தகங்களை மீண்டும் கையேற்காமல் மீண்டும் விநியோகிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| vi. | நிதிப்பிரமாணம் 454(2) | 02 கமநல சேவைக் குழுக்களில் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | கோன்வெவ - மின்சார உபகரணப் பதிவேடு பேணிச் செல்லப்படுவதுடன் அதனை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பறங்கியாவாடி – பதிலளித்திருக்கவில்லை. | மேற்படி |
| (ஈ) | திறைசேரி சுற்றறிக்கை 1981 ஒக்தோபர் 16 ஆந் திகதிய இலக்கம் 107 என்ற சுற்றறிக்கையின் 21.2 ஆம் பந்தி | நிறைவேற்று செயலாளரால் ஆகக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு ஒரு தடைவ இருப்புப் புத்தகம் பரீட்சிக்கப்பட்டு விடயங்கள் சரி பார்க்கப்படுவதை உறுதிப்படுத்தி இருப்புப் புத்தகம் கையொப்பம் இடப்பட வேண்டியிருந்த போதிலும் 15 குழுக்களால் அதற்கு இணங்க | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | | |
| (உ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை 1986 ஒக்தோபர் 21 ஆம் திகதி இலக்கம் 264 என்ற சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | 12 குழுக்களுக்குரிய ஆண்டிற்குரிய அறை வாடகை அறவிடாமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 894,329 நிலுவை மீதி ஒன்று அறவிட வேண்டிக் காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அரச நிதி சுற்றறிக்கை 2016 மார்ச் 21 ஆந் திகதி இலக்கம் 05/2016 என்ற சுற்றறிக்கை | 05 கமநல சேவைக் குழுக்களால் 2024 ஏப்ரல் 26 ஆந் திகதி வரையிலும் பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பலாகல - பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமல் இருந்த போதும் பொது 44 மற்றும் பொது 66 படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பதவி பராக்கிரமபுர மற்றும் கம்பிரிஸ்வெவ கமநல சேவை நிலையங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (எ) | கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 12/2018 (திருத்தப்பட்ட) | கமநல அபிவிருத்தி பிரதி உதவி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி 02 குழுக்களால் ரூபா 804,202 தொகை மற்றும் ரூபா 4,610,262 கொடுப்பனவு ஒன்று வ/ப வர்த்தக உர கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. | பலாகல - கொடுப்பனவு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. தந்திரிமலை – அங்கீகாரம் கிடைத்த உறுதிச்சீட்டு தொலைந்து போனமையினால் புதிய உறுதிச்சீட்டு ஒன்று அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேற்படி |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

அநுராதபுரம் மாவட்டத்தில் 42 கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 61,641,523 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த ஆண்டின் மிகை ரூபா 24,029,369 ஆகும். மீளாய்வாண்டில் 41 கமநல வங்கிகளின் நிதி விளைவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 20,166,421 மிகையும், ஒரு வங்கியில் ரூபா 21,291 பற்றாக்குறையும் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,977,580 ஆகும். நிதி விளைவுகளில் முன்னேற்றத்திற்கு குழு உர வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 31 கமநல சேவைக் குழுக்களால் கமநல சேவை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணி கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரித்தை கையேற்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என | காணிகளின் சட்ட ரீதியான உரித்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 06 கமநல சேவைக் குழுக்களில் சேதன கரைசல் பசளை லீற்றர் 2636, உயிரியல் கரைசல் பசளை கிலோகிராம் 810, உயிரியல் கரைசல் பசளை லீற்றர் 1797, விசேட பசளை கிலோகிராம் 650, சேதனப் பசளை கிலோகிராம் 1200 மற்றும் பெறுமதி ரூபா 37,050 ஆன கரைசல் பசளை இருப்பின் பெறுமதி குறிப்பிடப்படாத 1290 சேதனப் பசளை பக்கற்றுக்கள், ரூபா 37,050 பெறுமதியான சேதன கரைசல் பசளையில் 02 வகைககள் காலாவதியாவதற்கு முன்னர் உரிய பிரகாரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகளால் இந்த பசளை பெறப்படாது இருந்தமையால் உரிய இருப்பு களஞ்சியத்தில் எஞ்சிக் காணப்படுகின்றதுடன் மீண்டும் கம்பனிக்கு கையளிக்குமாறு கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | காலாவதியாவதற்கு முன்னர் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 03 கமநல சேவைக் குழக்களில் கைவிரல் அடையாள இயந்திரம் செயழிழந்ததன் அடிப்படையில் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலிழந்துள்ள கைவிரல் அடையாள இயந்திரத்தை பழுது பார்க்கப்படும். | செயலிழந்த கைவிரல் அடையாள இயந்திரத்தை விரைவாக பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கஹட்டகஸ்கிஹிலிய கமநல சேவைக் குழுவிற்காக வழங்கப்பட்டிருந்த (ERP) பசளை கிலோகிராம் 7050, அளவுகள் கணிப்பிடப்படாத சேதனப் பசளை / சேதனக் கரைசல் பசளை இருப்பு சில ஆண்டுகள் முதல் குழுக்களின் களஞ்சியத்தில் விளைவற்றுக் அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது. | ERP பசளை கிலோகிராம் 50 வீதம் ஆன 81 மூட்டைகள் கலாவதியாகி இருந்தமையால் அகற்றுவதற்கான அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் சேதனப் பசளை, சேதனக் கரைசல் பசளை காலாவதியாகியமையால் அகற்றுவதற்கு இந்த ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | பசளை வகைகள் காலாவதியாவதற்கு முன்னர் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கப்புக்கொல்லாவ கமநல சேவைக் குழுவில் நீர் உயரம் அளக்கும் மாணி பொருத்துவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 100,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய பெறுமதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சிராவஸ்திபுர மற்றும் எலயாபத்துவ கமநல சேவைக் குழுக்களினால் அதிகாரப் பிரதேசத்தில் ஒரு குளத்தில் சேற்று மண்ணை அகற்றுவதற்காக வைப்புப் பணமாக முறையே பெறப்பட்ட ரூபா 680,000 மற்றும் ரூபா 336,000 தொகை ஒன்று கணக்குகளில் உள்ளடக்காமல் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 05/2021 ஆம் இலக்க மற்றும் 2021 மே 12 ஆந் திகதிய சிறு நீர்ப்பாசனக் குளங்களில் சேற்று மண் அகற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கும் சுற்றறிக்கையின் ஏனைய ஏற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உரிய தொகை இலாபமாக கருதி குழுவிற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் சேற்று மண்ணை அகற்றுவதற்காக பெறப்படுகின்ற நிதி தொடர்பாக சரியான உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எலாயாப்பத்துவ – சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | சிராவஸ்திபுர கமநல அபிவிருத்தி குழுவினால் 2005/2006 பெரும் போகத்தில் நெல் பயிரிடுவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் அறவிட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,025,642 தொகை ரூபா 30,000 வீதம் கடன் தவணைகளில் செலுத்துமாறு அநுராதபுரம் நீதிமன்றம் 2012 ஆம் ஆண்டில் கட்டளையிட்டிருந்த போதும் அந்த பணத்தை அறவிடப்பட்டமைக்கான எந்த ஒரு தகவலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் தொகையை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் தரிசு வயல் காணிகளை இயலுமான வரை குறைப்பதற்கு கமநல சேவைக் குழு முயற்ச்சி எடுக்க வேண்டிய போதிலும் 02 கமநல சேவை குழு அதிகாரப் பிரதேசத்தில் 101.1 ஏக்கர் அளவிலான தரிசு வயற்காணி காணப்பட்டது. | வயல் தரிசாகக் காணப்படுவதற்கு காரணங்களை கண்டறிந்து எதிர்காலத்தில் அந்த தரிசு வயற் காணிகளை விளைச்சல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் என. | தரிசு வயற் காணிகளின் அளவினை இயலுமான வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | கள்ளஞ்சிய கமநல சேவை நிலையத்தின் முன்னாள் பிரதேச உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிக் காணப்படுகின்ற ரூபா 327,110 இருப்பு பற்றாக்குறைப் பெறுமதி மற்றும் 02 கமநல சேவை நிலையங்களில் இருந்து சில காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 77,995 இருப்புப் பற்றாக்குறை என்பவற்றை இனங்கண்டு அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்புப் பற்றாக்குறை பெறுமதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | 03 கமநல சேவைக் குழுக்களில் காணப்பட்ட ரூபா 1,265,740 கையில் உள்ள பணத்தின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணக் கோவையின் பிரகாரம் | இது தொடரபாக திணைக்களத்தால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள் ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஆரம்ப விசாரணைகள் விரைவாக நடாத்தப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனைகள் மேற்கொண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஓ) | முறியாக்கடவல கமநல சேவை நிலையத்திற்கு சேதனப் பசளை நிகழ்ச்சித் திட்டத்திற்கு இலவசமாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ஈ.ஆர்.பீ பசளை கிலோகிராம் 50 கிலோகிராம் ஆன 67 மூட்டைகள் கமநல சேவை நிலையத்திற்கு 2022 சனவரி 12 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் அந்தப் பசளை இருப்பு கணக்காய்வுத் திகதியான 2024 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் காணப்பட்டது. | இந்த பசளையின் அளவை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பசளையை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | மிகிந்தலை கமநல சேவை நிலையத்திற்கு உரிய 2013 ஆம் ஆண்டின் போது இடம் பெற்ற நிதிப் பிரமாணம் 104(அ) பரிசோதனையின் பிரகாரம் இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 2,858,551 தொகையை 2023 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு மேலும் ரூபா 1,958,551 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது. | இதற்குரிய நபருக்கு பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் பணத்தை அறவிட முடியாதிருந்தமையால் பிரதான அலுவலகத்தின் ஆலோசனையின் அடிப்படையில் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய பணத்தை விரைவாக அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (க) | முறியாக்கடவல கமநல சேவை நிலையத்தில் முன்னாள் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தரால் 2011 ஆகஸ்ட் 12 ஆம் திகதி தனியார் நிலையான கணக்கு ஒன்றிற்கு பசளை முதலீட்டுக் கணக்கில் இருந்து ரூபா 450,000 பெறுமதி உடைய காசோலை செலவு வைக்கப்பட்டதன் காரணமாக அந்த தொகை மற்றும் அதற்குரிய வட்டியான ரூபா 478,684 உடன் ரூபா 928,684 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது. | சட்டத்தின் மூலம் அந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | பளுகஸ்வெவ கமநல சேவைக் குழுவில் பழைய இருப்புப் புத்தகம் தொலைந்தமையால் பின்னர் தயாரிக்கப்பட்ட புதிய இருப்புப் புத்தகத்தில் 2023 சனவரி 16 இல் உள்ளவாறு ஆரம்ப மீதியில் விற்பனைப் பெறுமதி ரூபா 1,199,600 ஆன யூரியா கிலோகிராம் 5998 பற்றாக்குறை இருப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | கமநல சேவைக் குழுவிற்குரிய இருப்பு பதிவேடை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இருப்புப் பதிவேடை நாளதுவரையாக்குவ துடன் மேலும் பற்றாக்குறை இருப்பு ஏற்படுவதற்கான காரணத்தை முழுமையான விசாரணை மூலம் இனங்காணப்படல் வேண்டும். |
| (கி) | யகல்ல கமநல சேவை நிலையத்தில் முன்னாள் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தரிடம் இருந்து 2014/15 இல் இருந்து பெரும் போக நிலையத்திற்கு அதிக விலையான பசளை பெற்றுக் கொள்வதற்காக அறவிட வேண்டிக் காணப்பட்ட ரூபா 736,800 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிதிப்பிரமாணம் 104 இல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின் றது. | நிலுவை மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 16 கமநல சேவைக் குழுக்களில் நீண்ட காலமாக தொடர்ச்சியாக தீர்த்து வைக்கப்படாமல் காணப்படுகின்ற பெறுமதி ரூபா 26,344,644 ஆன பெற வேண்டிய 53 கணக்குகள் மற்றும் கூட்டுமொத்தமாக ரூபா 13,018,377 ஆன செலுத்த வேண்டிய 55 கணக்கு மீதிகள் என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் ஆலோசனையின் அடிப்படையில் இந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | உரிய கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் கெப்பிடிக்கொல்லாவ மற்றும் மதவாச்சி கமநல சேவைக் குழுக்களுக்கு வழுங்கப்பட்ட நீர் உயரம் அளக்கும் 28 மாணிகள் கணக்காய்வுத் திகதியான 2024 மே 10 ஆந் திகதி வரையிலும் பொருத்துவதற்கோ அல்லது கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 39 கமநல சேவைக் குழுக்களுக்காக 2021 திசெம்பர் மாதம் கிடைக்கப் பெற்ற கூட்டுப் பசளை கூறிடல் இயந்திரம் / அரைக்கும் இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | கூட்டுப்பசளை கூறிடல் இயந்திரம் / அரைக்கும் இயந்திரத்தை செயற்படுத்துவதற்காக தேவையான டெக்டர் நிலையத்திடம் காணப்பட வில்லை. | சொத்துக்களை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 04 கமநல சேவை நிலையங்களுக்குச் சொந்தமான நாற்றுக்கள் விற்பனை செய்யும் கடை மற்றும் சேதனப் பசளை என்பன சில வருடங்கள் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர் காலத்தில் இந்த கொட்டகைகளை ஏனைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (இ) | ரத்மல்கஹவெவ கமநல சேவை நிலையத்திற்கு 2022 மார்ச் 09 ஆந் திகதி கிடைக்கப் பெற்ற 04 வேளாண்மை நட்டும் இயந்திரங்கள் மற்றும் அதற்காக கிடைக்கப் பெற்ற Rice Seeding Tray 8000 பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த இயந்திரத்தை பயன் படுத்துவதற்கு விவசாயிகள் விருப்பம் இன்மையினால் இதுவரை பயன்படுத்தப்படவில்லை. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 02 கமநல சேவை நிலையங்களுக்கு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் காலநிலைமாற்ற செயற் திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற நாற்றுக்களை நட்டுகின்ற 02 இயந்திரங்கள், புல் பிடுங்குகின்ற 04 இயந்திரங்கள், வேளாண்மை நட்டுகின்ற 05 இயந்திரங்கள் மற்றும் 02 வேளாண்மை வெட்டும் இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த அதிகார பிரதேசத்திற்காக இந்த இயந்திரங்கள் பொருத்தமற்றதாக காண்பித்து உரிய இயந்திரங்கள் ஏனைய நிலையங்களுக்கு வழங்குமாறு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | மேற்படி |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் போது கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தால் ரூபா 2,202,965 செலவில் பராக்கிரமபுர கமநல சேவைக் குழுவில் நிர்மாணிக்கப்பட்ட இயற்கை உணவக விற்பனைச் சாலை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது. | இயற்கை உணவகத்தை சுற்றி வேலி நிர்மாணித்து பிரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் எதிர் வரும் சில மாதங்களில் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஊ) | 03 கமநல சேவை குழுக்கள் 02 நிலத் தராசு, 04 கை டெக்டர், கன்றுகள் நட்டுகின்ற 03 இயந்திரங்கள் மற்றும் 04 விளைச்சல் அறுவடை செய்யும் இயந்திரங்கள் பல வருட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | SAAP செயற்திட்டத்தின் கீழ் எலயாப்பத்துவ கமநல சேவை நிலையக் காணியில் வாகனம் நிறுத்தும் கராஜ் ஒன்று நிர்மாணிக்கப்பட்ட போதும் அந்த கமநல சேவை குழுவின் பொறுப்பில் எந்த ஒரு வாகனமும் காணப்படாதிருந்தமையால் உரிய செயற்திட்டம் விளைவற்றுக் காணப்பட்டது. | உரிய செயற்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் உபகரணங்கள் வழங்கப்படுகின்றமையால் அவற்றை அதில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக இந்த கட்டடம் தயாரிக்கப்பட்டுள்ளது என. | முறையான மதிப்பீட்டை மேற்கொண்டு செயற்திட்டங்களில் தேவை இனங்காணப்படல் வேண்டும். |

## 4. கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 சனவரி 01 முதல் திசெம்பர் 31 வரையான காலப் பகுதியில் 17 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய 282 பிரிவுகளில் 115 பிரிவுகளின் மூலம் எந்த ஒரு பயிர் செய்கைக் கடனும் விநியோகிக்கப்படாது இருந்ததுடன் 244 பிரிவின் மூலமும் எந்த ஒரு செயற்திட்டக் கடனும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வழங்கப்படுகின்ற கடன் அளவு போதியளவில் இல்லாதிருந்ததாக மக்கள் தெரிவித்திருந்தனர். | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உத்தியோகத்தர்கள் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | பிரிவுகளில் சிறிய குழுக்களை ஸ்தாபித்தல் மற்றும் அவர்களை செயலில் உள்ளதாக கமநல வங்கிகளுடன் பங்களித்துக் கொள்ளல் பிரிவுப் பொறுப்பு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும் 24 கமநல சேவை குழு அதிகார பிரதேசங்களில் கூட்டுமொத்தமாக 100,071 விவசாயக் குடும்பங்களில் இருந்து கமநல வங்கிகளுடன் தொடர்புபட்டிருக்கின்ற சிறிய குழுக்களின் எண்ணிக்கை 3360 ஆன ஆகக் குறைந்த அளவைக் கொண்டிருந்தது. | அந்த சிறிய குழுக்களின் கணக்குகளை போதிய அளவில் அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரிவுகளில் சிறிய குழுக்களை ஸ்தாபித்தல் மற்றும் அவர்களை செயற்படுமாறு கமநல வங்கிகளுடன் பங்களித்துக் கொள்வதற்கு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 05 கமநல வங்கிகளில் அங்கத்தவர் கடன் தொகையை அறவிடுவதற்காக 2004 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் விசாரணைகளுக்கு உரியதாக நீதிமன்றத்தின் மூலம் அறவிடப்பட்டிருந்த ரூபா 1,085,264 கடன் தொகை கணக்காய்வுத் திகதி வரையிலும் கமநல வங்கிக்கு மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய பணம் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 06 கமநல வங்கிகளில் பூர்த்தி செய்யப்படாத 117 கடன் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை | கடன் வழங்குதல் முறையாக |

| | | | |
|---|---|---|---|
| | விண்ணப்பங்களுக்குரிய கூட்டு மொத்தமாக ரூபா 6,945,000 கடன் தொகை விநியோகிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | 04 கமநல வங்கிகளில் 2015/2016, 2019/2020 மற்றும் 2020/2021 ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட விசேட சோள கடன் தொகையில் 130 விவசாயிகளிடம் இருந்து ரூபா 6,071,541 தொகை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டி இருந்தது. | இந்த கடனாளிகள் கமநல நடுவர் தீர்ப்பு சபைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். | நிலுவைக் கடனை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கம்பிரிகஸ்வெவ கமநல வங்கியில் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சாரலங்கா செயற்திட்டக் கடன் ரூபா 500,000 தொகையில் ரூபா 480,722 கடன் மீதி ஒன்று 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்படி |
| (எ) | 03 கமநல வங்கிகளில் விவசாய கடன், நெல் அறுவடை கடன், தொழில்முயற்சி கடன் விநியோகிப்பதற்கு உரியதாக 69 விவசாயிகளிடம் இருந்து கூட்டுமொத்தமாக ரூபா 3,514,673 காலாவதியான நிலுவைக் கடன் தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது. | பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்படி |
| (ஏ) | 08 கமநல வங்கிகளால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட கடன் தொகையில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் காலாவதியாகி இருந்த கடனின் அளவு ரூபா 12,543,678 ஆகும். | காலாவதியான நிலுவைக் கடனை அறவிடுவதற்காக நடுவர் தீர்ப்பு சபைக்கும் நீதிமன்றத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | சாலியபுர கமநல சேவை குழு அதிகாரப் பிரதேசத்தில் மொத்த விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 3870 ஆக இருந்த போதிலும் அதில் 2041 விவசாயக் குடும்பங்கள் மாத்திரம் விவசாய வங்கி நடவடிக்கைகளுக்காக தொடர்பு பட்டிருந்ததுடன் 1829 விவசாயக் குடும்பங்கள் அதாவது 47 சதவீதமானவர்கள் மேலும் விவசாய வங்கி நடவடிக்கைகளுக்காக கவர்ந்து கொள்வதற்கு கமநல வங்கி தவறியிருந்தது. | எதிர்காலத்தில் விவசாய வங்கிக்கு தொடர்புபட்டிராத விவசாயக் குடும்பங்களை தொடர்புபடுத்திக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வங்கி நடவடிக்கைகளை பரவலாக்குவதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |